Praise the Lord: Let us pray. ..

ஆண்டவருடைய வார்த்தை சொல்கிறது: The word of God says:

கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது. (சங்கீதம்/Paslm 144:15)

Happy are the people whose God is the LORD! (NKJV) blessed is the people whose God is the LORD. (NIV)

Ref: Online Dictionary: (Biblical usage)

(தெய்வம்) **GOD:** 1) (plural) a) rulers, judges. b) divine ones. c) angels. d) gods
2) (plural intensive - singular meaning) a) god, goddess. b) godlike one.
c) works or special possessions of God. d) the (true) God. e) God

(கர்த்தர்) **LORD:** (Jehovah = "the existing One") 1) the proper name of the one true God

பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள்; நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார். (சங்கீதம்/Paslm 4:3)

But know that the LORD has set apart for Himself him who is godly; The LORD will hear when I call to Him. (KJV)

Know that the LORD has set apart his faithful servant for himself; the LORD hears when I call to him. (NIV)

அறிந்திருக்கும் அல்லது தெரிந்திருக்கும் தெய்வத்தை, பக்தியோடு வணங்குகிற அனைவரும் தெய்வத்திடம் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற வாஞ்சிக்கிறார்கள்.

அப்படி பலர் இவ்வுலகத்தின் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றாலும்,…..

ஆண்டவருடைய வார்த்தை சொல்கிறது, "கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது."

People have faith in God whom they know or aware of. They wish to receive Happiness and Blessing from God.
Eventhough many are getting Happiness and Blessing in this world…….
The word of God says: "blessed is the people whose God is the LORD."

*கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனத்திற்கு அப்படி என்ன விசேஷம்?*
*What is such special to those whose God is the LORD?*

இயேசுகிறிஸ்து சொல்கிறார்: Jesus Christ says:

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், **என்னுடைய** சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. (யோவான்/John 14:27)

Peace I leave with you, My peace I give to you; not as the world gives do I give to you. Let not your heart be troubled, neither let it be afraid.

மேலும் அவர் சொல்கிறார்: He further says:

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவான் 14:6)

Jesus said to him, "I am the way, the truth, and the life. No one comes to the Father except through Me. (John 14:6)

*யார் இந்த இயேசுகிறிஸ்து? Who is this Jesus Christ?*

ஆண்டவருடைய வார்த்தை சொல்கிறது: The word of God says:

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர்/Romans 6:23)

For the wages of sin is death, but the gift of God is eternal life in Christ Jesus our Lord.

இயேசுகிறிஸ்துவே கர்த்தரென்று ஆண்டவருடைய வார்த்தை சொல்கிறது: அவர் ஒருவரே நமக்கு இவ்வுலக வாழ்க்கைக்குப் பிறகும் ஜீவனைக் கொடுக்க வல்லவர் என்பதை அறிகிறோம்.
The word of God says, Jesus Christ is the LORD. We understand, He is the one can give us the life even after this world life.

*எனவே,* கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது. (சங்கீதம்/Paslm 144:15)
***So,*** Happy are the people whose God is the LORD! (NKJV) blessed is the people whose God is the LORD. (NIV)

*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை எப்படி தெய்வமாக கொண்டிருக்க வேண்டும்?:*
*How should we have the Jesus Christ is our LORD?*

இயேசுகிறிஸ்து சொல்கிறார்:
நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; (யோவான்/John 11:25)

"I am the resurrection and the life. He who believes in Me, though he may die, he shall live.

*விசுவாசிக்கவேண்டும்:*

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். (ரோமர் 10:9-10)

that if you confess with your mouth the Lord Jesus and believe in your heart that God has raised Him from the dead, you will be saved. For with the heart one believes unto righteousness, and with the mouth confession is made unto salvation. (Romans 10:9-10)

*விசுவாசத்தோடு...... கிறிஸ்துவுக்குள்ளான மறுபடியும் பிறத்தல்: (ஞானஸ்நானம்)*

இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.
இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். (யோவான் 3:3,5)

*born again*

Jesus answered and said to him, "Most assuredly, I say to you, unless one is born again, he cannot see the kingdom of God." Jesus answered, "Most assuredly, I say to you, unless one is born of water and the Spirit, he cannot enter the kingdom of God. (John 3:3,5)

*புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு:*

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம் :
ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். (ரோமர் 6:4-5)

*walk in newness of life.*

Therefore we were buried with Him through baptism into death, that just as Christ was raised from the dead by the glory of the Father, even so we also should walk in newness of life.
5 For if we have been united together in the likeness of His death, certainly we also shall be *in the likeness* of *His* resurrection…

*நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு:*

நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். (1 பேதுரு 2:24)

*having died to sins*

who Himself bore our sins in His own body on the tree, that we, having died to sins, might live for righteousness—by whose stripes you were healed. (1 Peter 2:24)

*உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நம்மோடு கூட இருப்பவர்:*

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.
ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,
நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:18-20)

***I am with you always***

And Jesus came and spoke to them, saying, "All authority has been given to Me in heaven and on earth. 19 Go therefore[a] and make disciples of all the nations, baptizing them in the name of the Father and of the Son and of the Holy Spirit, 20 teaching them to observe all things that I have commanded you; and lo, I am with you always, *even* to the end of the age." Amen.

*விசுவாசமுள்ளவர்களாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள்:*

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். (யோவான் 1:12-13)

<u>those who believe in His name</u>

But as many as received Him, to them He gave the right to become children of God, to those who believe in His name: [13] who were born, not of blood, nor of the will of the flesh, nor of the will of man, but of God. (John 1:12-13)

*கிறிஸ்துவை தரித்துக்கொள்ளும் பாக்கியம்:*

நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. (கலாத்தியர் 3:26-27)

*<u>For you are all sons of God through faith</u>*

For you are all sons of God through faith in Christ Jesus. For as many of you as were baptized into Christ have put on Christ. (Galatians 3:26-27)

*கிறிஸ்துவினாலே நமக்கு விடுதலை:*

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:2)

*<u>Christ Jesus has made me free</u>*

For the law of the Spirit of life in Christ Jesus has made me free from the law of sin and death. (Romans 8:2)

இப்படியாக, <u>கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற</u> ஜனம் பாக்கியமுள்ளது. (சங்கீதம்144:15)
***This way,*** <u>Blessed is the people whose God is the LORD</u>. (NIV)

*தேவனுடைய அன்பு*

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:16-17)

*<u>God's Love:</u>*

For God so loved the world that He gave His only begotten Son, that whoever believes in Him should not perish but have everlasting life. [17] For God did not send His Son into the world to condemn the world, but that the world through Him might be saved.

*தேவனுடைய பிரியம்:*

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று. (கொலோசெயர் 1:19-20)

*<u>God was pleased</u>*

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

தயவுசெய்து மேலும் ஆண்டவரின் வார்த்தைகளை வாசித்து தியானியுங்கள்.
கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. நன்றி.

Please read further the Word of God. God Bless You. Thanks.

Let us Pray